பக்கங்கள்:-16

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 05 | திங்கட்கிழமை | 17.02.2025 | அதிர்வு 199 |
|---|---|---|---|---|---|

## மூத்த ஊடகவியலாளர் சீதா ரஞ்சனி காலமானார்



மூத்த ஊடகவியலாளர் சீதா ரஞ்சனி (வயது 70) நேற்று ஞாயிற்றுக் கிழமை அநுராதபுரத்தில் காலமானார்.

சீதா ரஞ்சனி 06



### அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில்

# பிரிட்டன் தூதுவருடன் நாளை சுமந்திரன் பேச்சு

இலங்கைக்கான பிரிட்டன் துதுவர் ஆண்ட்ருபேட்ரிக்கைநாளைசெவ்வாய்க் கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட வுள்ளன. 06

## வேலணையில் மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்!



தொலைக்காட்சி பார்ப்பதற்காக மின் னிணைப்பை ஏற்படுத்த முயன்ற 9 வயது சிறுவன் மின்சாரம் 06

## நாடாளுமன்றத்துக்கு வருமாறு ரணிலுக்கு எதிரணி அழைப்பு!



எதிரணிகளை வழிநடத்துவதற்காக நாடாளுமன்றம் வருமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிரணி உறுப்பினர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போதே மேற்படி கோரிக்கை ரணிலிடம் முன்வைக்கப் பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், நாடாளுமன்றம் 06




நேற்று மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் நடந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் கூட்டம் கட்சி நிர்வாகத்தில் அதிரடி மாற்றத்தோடு முடிவுக்கு வந்திருக்கின்றது.

காலை தொடங்கிய மத்திய குழுக் கூட்டம் மதிய இடைவெளிக்கு பின்னரும் நடைபெற்று முடிவடையும் கட்டத்தை நெருங்கிய போது தான் அந்த மாற்றம் அதிரடியாஜ நடந்தேறியது.

கூட்டம் முடிவை நெருங்கிய சமயம் கட்சியின் பொதுச்செயலாளராகக் கடமையாற்றி வந்த மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பி. தான் சுகவீனம் காரணமாக மருத்துவ சிகிச்சைகளுக்குச் செல்ல வேண்டி இருப்பதால் கட்சியின் பொதுச் செயலாளராகத் தொடர்ந்து செயல்பட இயலாமல் இருக்கிறார் எனத் தெரிவித்தார்.

அவரது பதவி விலகலை அல்லது பதவி விடுப்பை மத்திய குழு ஏற்றுக்கொள்ள, தற்போது வரை கட்சியின் சிரேஷ்ட துணைச் செயலாளராக இருக்கும் சுமந்திரன் கட்சியின் 06




# அதிக வெப்பநிலை இரத்தினபுரியில் பதிவு

நாட்டின் பல பகுதிகளிலும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகளவான வெப்பநிலை பதிவாகியிருந்தது.

இதன்படி, அந்த பகுதியில் 36.7 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியிருந்தது.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதி வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, ஆசியா, ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களில்உள்ள நாடுகளும்அதிக வெப்பநிலையினால் பாதிக்கப்படுகின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன.



# அரிசி பதுக்கி வைத்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

அதிகூடிய விலையில் அரிசியை விற்பனை செய்யும் மற்றும் பதுக்கி வைத்திருக்கும் விற்பனையாளர்களைக் கண்டறிவதற்கான சோதனை நடவடிக்கை நேற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு, கோட்டை பழைய வீதி பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது அரிசி இருப்புக்களைப் பதுக்கி வைத்திருந்த விற்பனை நிலைய உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விற்பனை நிலையத்தில் 5 கிலோ கிராம் கீரி சம்பா அரிசி பொதிகள் 550 கண்டுபிடிக்கப்பட்டன என நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ரமலான் பண்டிகையை முன்னிட்டு சந்தையில் கீரி சம்பா அரிசிக்கு அதிக கேள்வி ஏற்பட்டுள்ளதால், சில விற்பனையாளர்கள் அரிசியைப் பதுக்கி வைத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# எழுத்தாளர் பாலமனோகரனின் ‘மிஸ்டர் மங்’ நூல் வெளியீடு

(பா.சதீசன்)

அண்ணாமலை பாலமனோகரனின் “மிஸ்டர் மங்” நூல் வெளியீட்டு விழா தண்ணீரூற்று பரிமத்தியா ஆலய மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

புகழ் பூத்த எழுத்தாளர்களில் ஒருவரான, நிலக்கிளி நாவலை எழுதிய அண்ணாமலை பாலமனோகரன் அவர்களின் “மிஸ்டர் மங்” எனும் நூல் வெளியீட் டு விழா நேற்று முன்தினம் மாலை பரிமத்தியா ஆலய மண்டபம் தண்ணீரூற்று, முள்ளியவளையில் இடம்பெற்றிருந்தது.

முழவம் கலையகத்தினரின் ஏற்பாட்டில் ஆரம்பமாகிய நிகழ்வானது மங்கல விளக்கேற்றல், வரவேற்புரை, தலைமையுரை, நூலாசிரியர் அறிமுக உரை, இடம்பெற்று நூல் வெளியீடு இடம்பெற்றிருந்தது. தொடர்ந்து நூலின் முதற் பிரதியை கமலராணி பாலமனோகரன் வழங்க லண்டனை சேர்ந்த தி.தியாகராஜா பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நூல் விமர்சன உரை, சிறப்பு பிரதிவழங்கல், ஏற்புரை இடம்பெற்று நன்றியுரையுடன் நிறைவு பெற்றிருந்தது.

இந்த நூல் வெளியீட்டுவிழாவில் அருட்தந்தை ஜேம்சன் ஞானப்பொன் ராஜா, லண்டன் திருநாவுக்கரசு தியாகராஜா, கவிஞர்களான சோ.ப, முல்லைச்செல்வன், தீபச்செல்வன், கருணாகரன், அந்தோனிப்பிள்ளை, முழவம் கலையகத்தினர், ஆசிரியர்கள்,வர்த்தகர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




















# கடவுச்சீட்டை ஒப்படைக்குமாறு இராணுவ வீரர்களுக்கு உத்தரவு

மேஜர் பதவிக்குக் கீழுள்ள அனைத்து இலங்கை இராணுவ வீரர்களும் தங்களது கடவுச்சீட்டை அந்தந்த படைப்பிரிவுகளிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு இராணுவ ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் இதுதொடர்பில் தெரிவிக்கையில், இராணுவ வீரர்களின் அமைதி காக்கும் கடமைகள் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சியை விரைவுபடுத்துவதற்கான திட்டத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

# ஜெய்சங்கர் - விஜித ஹேராத் அதிகாரப்பூர்வ சந்திப்பு



இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேராத்துக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பயனுள்ள தொடர்புகள் மற்றும் விரிவான ஒத்துழைப்பு மதிப்பாய்வு செய்யப்பட்டதாக அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தனது உறுதிப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் தனது பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வெட்டுக்காயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு!

உடல் முழுவதிலும் வெட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டம், அத்தனகல்லை பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பாழடைந்த வீடொன்றில் மேற்படி இளைஞரின் சடலம் காணப்பட்டுள்ளது.

கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேற்படி இளைஞர் சிலரால் கடத்தி வரப்பட்டு கூரிய ஆயுதங்களால் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.



சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அத்தனகல்லை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 90 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி




இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த ஆண்டு 90 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெறுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2024 ஆம் ஆண்டில், இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த போது, அதிலிருந்து மீட்கும் நோக்கில் 80 கோடியே 80 லட்சம் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருந்தது.

இந்த ஆண்டு வழங்கப்படும் நிதி குறிப்பாக விவசாயம், மின்சாரம், சுற்றுலா, திறன் மேம்பாடு மற்றும் பேரின பொருளாதார ஸ்திரத்தன்மை போன்ற துறைகளுக்கு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு வருவதனால் முன்னுரிமை அடிப்படையில் இலங்கைக்குத் தனது ஆதரவினை வழங்கி வருவதாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டகாஃபுமி கடோனோ தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய தேசிய கட்சியுடன் கலந்துரையாடுவதற்கு நியமிக்கப்பட்ட குழுவிலிருந்து திஸ்ஸ விலகல்

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்துரையாடுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க விலகியுள்ளார்.

இரு தரப்பினரும் இது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடல்களை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுச் செயலாளராக மத்திய குழுவினால் தேர்வு செய்யப்பட்டார்.

26 பேருக்கு மேல் பங்கு பற்றிய மத்திய குழுவின் கூட்டத்தில் ஆக சிறிதரன் எம்.பி., சிறிநேசன் எம்.பி., முன்னாள் எம்.பி.யோகேஸ்வரன் ஆகியோர் மாத்திரம் இந்தத் தெரிவுக்கு எதிரான தமது எதிர்ப்பைப் பதிவு செய்து கொண்டனர்.

பொதுச் செயலாளர் பதவி வெற்றிடத்தைத் தற்போதைய நிர்வாகச் செயலாளர் குலநாயகம் கவனிக்கலாம் என்று சிறிதரன் தரப்பு முன்வைத்த யோசனையை ஏற்றுக்கொள்ள கட்சியின் தலைவர் சிவி.கே.சிவஞானம் இடம் வழங்கவில்லை.

யாப்புப்படி பொதுச் செயலாளராக சிரேஷ்ட துணை செயலாளரே நியமிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டினார் சி.வி.கே.சிவஞானம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில், கட்சியின் பொதுச் செயலாளருக்கு அதீத அதிகாரங்கள் உள்ள நிலையில் அந்தப் பதவி இப்போது சுமந்திரனின் கைகளில் வீழ்ந்துள்ளது.

கட்சியின் தலைவர் பதவியை சி.வி.கே.சிவஞானம் பொறுப்பேற்று இருப்பதால், அவர் இதுவரை வகித்து வந்த கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவர் பதவிக்கு சிறிதரனை நியமிக்கலாம் என்று ஒரு யோசனை கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. ஆனால் தாம் இன்னமுமே கட்சியின் பதில் தலைவரே என்று சுட்டிக் காட்டிய சி.வி.கே.சிவஞானம், அதன் காரணமாக தமது சிரேஷ்ட துணைத் தலைவர் பதவி இன்னமும் தம்வசமே இருக்கின்றது, அது வெற்றிடமாக வில்லை என்று கூறி சிறிதரனின் அந்த நியமனத்தை அவர் நிராகரித்தார்.

இதேவேளை கட்சியின் பல உறுப்பினர்கள் கட்சி முடிவுக்கு மாறாகப் பல விடயங்களில் செயற்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்ற பின்னணியில் கட்சியின் ஒழுக்காற்றுக் குழு நேற்று மத்திய குழுக் கூட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டது.

கடைசியாக 2023 மார்ச் 19ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஒழுக்காற்று குழுத் தலைவராக யோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவர் அந்தப் பதவியில் இருந்து விலகிய இடத்துக்கு புதிய ஒழுக்காற்றுக் குழுத் தலைவராக குருகுலராஜா நேற்று நியமிக்கப்பட்டார்.

நேற்றைய முடிவுகளின் படி கட்சியின் ஒழுக்காற்று குழுவில் கனகசபாபதி, குகபாலன், துரைராஜசிங்கம், சிறிநேசன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சேயோன், மட்டக்களப்பு சரவணபவன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

அரசியல் தீர்வு மற்றும் ஏனைய தமிழ் கட்சிகளுடன் பேச்சு நடத்துதல் ஆகிய விடயங்களுக்காக மத்திய குழுவினால் நியமிக்கப்பட்ட ஏழு பேர் குழுவும் நேற்று மறுசீரமைக்கப்பட்டது. அதில் இதுவரை காலமும் தாம் இருந்த இடத்துக்கு சிறிநேசன் எம்.பியை நியமிக்குமாறு சாணக்கியன் எம்.பி. கேட்டுக்கொண்டார். அது நேற்றைய கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இந்தக் குழுவில் சி.வி.கே.சிவஞானம், சத்தியலிங்கம், சுமந்திரன், சிறிதரன், துரைராஜசிங்கம், மட்டக்களப்பு சரவணபவன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

நேற்று மத்திய குழுக் கூட்டம் மாலையில் முடிவடைந்ததும், மேற்படி ஏழு பேர் கொண்ட குழுவின் கூட்டம் இடம்பெற்றது. துரைராஜசிங்கமும் சிறிதரனும் நேரத்துடன் புறப்பட்டுச் சென்றமையால் ஏனைய ஐவர் மட்டும் கூட்டத்தில் பங்கு பற்றினர்.

புதிய அரசமைப்பு உருவாக்க விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்கு வரும்படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்த அழைப்புத் தொடர்பாக இந்த கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

புதிய அரசமைப்புக்கான நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கத்திடமிருந்து உத்தியோகபூர்வமான அறிவிப்போ, விருப்பமோ வெளிப்படுத்தப்படாத நிலையில் தமிழர் தரப்புகள் ஒன்று கூடி ஆராய்ந்து, இது தொடர்பில் தமது நிலைப்பாடுகளை வெளியிடுவது உரிய காலத்துக்கு முந்திய நடவடிக்கை என்று குறிப்பிட்டு, அப்படியே அத்தோடு அந்த விடயத்தை விடுவதற்கு மேற்படி ஏழு பேர் கொண்ட உப குழு முடிவு செய்து.

அதேநேரம் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்று மக்களிடம் வாக்குறுதி அளித்து, அதனடிப்படையில் அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு, புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் காலத்தை தாமதப்படுத்தாது உடனடியாக அதனை முன்னெடுக்க வேண்டும் என்றும், அது தொடர்பில் தன்னுடைய யோசனைத் திட்டத்தை அரசு வெளிப்படையாக முன்வைக்க வேண்டும் என்றும் கட்சியின் சார்பில் கோரிக்கை விடுவதற்கு நேற்றைய அந்த உபகுழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முதலில் பொருளாதாரப் பிரச்சினைக்கான தீர்வு, பின்னரே அரசமைப்பு உருவாக்க விவகாரம் என்று அரசும் அதன் பேச்சாளரும் அண்மைக்காலத்தில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தனது கண்டனத்தையும் மேற்படி உபகுழு நேற்றைய தனது கூட்டத்தில் வெளியிட்டிருக்கின்றது.

தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாததால் எழுந்த நெருக்கடியே பொருளாதாரச் சிக்கல் உருவாகக் காரணம், பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதன் மூலமே பொருளாதாரப் பிரச்சினைக்கும் முற்றுப் புள்ளி வைக்க முடியும் என்று சுட்டிக்காட்டிய அந்த உபகுழு, ஆகவே அரசு இனியும் காலம் தாழ்த்தாமல் தனது யோசனைத் திட்டத்தை முன்வைத்து, புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும் என்றும் அந்த உபகுழு அரசை பகிரங்கமாக கேட்டுக் கொள்ள முடிவு செய்தது.

ஏற்கனவே நான் சுட்டிக் காட்டியபடி தமிழரசு கட்சியின் வழக்கு நீண்ட காலம் இழுபடப் போகின்றது. அதுவரை இந்த மத்திய குழுவும், இந்தத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் தலைமையிலான நிர்வாகமுமே நீண்ட காலத்துக்குத் தொடர போகின்றன.

ஆக கட்சியின் அதிகாரப்பிடி இப்போது சி.வி.கே.சிவஞானம் – சுமந்திரன் இணையின் கைகளில் வந்து விட்டது. அதில் இப்போதைக்கு மாற்றம் ஏற்படுவதற்கான சாத்தியமே இல்லை என்பதுதான் நிலைமை.

---

## நாடாளுமன்றுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருவதற்குரிய திட்டம் தன்னிடம் இல்லை என்றும், நாடாளுமன்றத்துக்கு வெளியில் அரசியல் பயணம் தொடரும் என்றும் ரணில் அறிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வருவதாக இருந்தால் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியைத் துறப்பதற்குத் தயார் என ரவி கருணாநாயக்க மற்றும் பைசர் முஸ்தபா ஆகியோர் அறிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூத்த ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர், எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர் என்ற பன்முக ஆளுமை கொண்டவர்.

சுதந்திர ஊடக இயக்கத்தின் முன்னாள் செயலாளரான சீதா ரஞ்சனி, ஊடகத்துறையில் வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவராவார்.

---

## பிரிட்டன் தூதுவருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக்கின் அழைப்பின் பேரில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பின்போது நாட்டின் சமகால அரசியல் நிலைவரம், அரசின் நடவடிக்கைகள், தமிழ் மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் உள்ளிட்ட பல வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த செப்டெம்பர் மாதம் மேலும் ஒருவருடகாலத்துக்கு நீடிக்கப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வரவிருக்கின்றது.

இந்நிலையில், அந்தத் தீர்மானத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு அளிக்கப்பட்ட ஆணையின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்டுவரும் கடந்த கால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறையின் தற்போதைய நிலைவரம் மற்றும் அதனை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள் முழுமையாக நிறைவு செய்வதற்கான சாத்தியப்பாடு என்பன பற்றி உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக்கிடம் சுமந்திரன் கேட்டறியவுள்ளார்.

அத்தோடு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து அமெரிக்கா விலகவுள்ள நிலையில், இலங்கை தொடர்பான இணை அனுசரணை நாடுகளின் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## வேலணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ். வேலணை – செட்டிப்புலம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில், அதே இடத்தைச் சேர்ந்த சந்திரஹாசன் கனிஷ்டன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

சிறுவனின் தாயார் அயலிலுள்ள உறவினரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். இதனால், வீட்டில் தனித்திருந்த சிறுவன் தொலைக்காட்சி பார்ப்பதற்காக மின் இணைப்பை ஏற்படுத்த முயன்றுள்ளார். அப்போது அவர் மின்சாரத்தால் தாக்குண்டு வீழ்ந்து கிடந்துள்ளார்.

வீட்டுக்கு வந்த உறவினர்கள் நிலைமையை அவதானித்து அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். எனினும், அவர் வழியிலேயே உயிரிழந்துவிட்டார் என்று அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சிறுவனின்சடலம்உடல்கூறாய்வுக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் எரிசக்தி அமைச்சருடன் கலந்துரையாடல்

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக் கொடி மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகி யோருக்கு இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகராலயத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் இருநாடு களுக்கும் இடையிலான எரிசக்தி கூட்டிணைவு தொடர்பில் பல்வேறு விடயங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்ட தாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இதனிடையே இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் மக்கள் விடுதலை முன்னணி யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கிடையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இருநாடுகளுக்குமிடையில் தற் போதுள்ள உறவுகளை மேலும் வலுப் படுத்தும் வகையில் விரிவான கருத் துப் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அமுல்படுத்த உத்தே சிக்கப்பட்ட திட்டங்களில் இருந்து விலகு வதாக அதானி நிறுவனம் அறிவித் துள்ள பின்னணியில் இந்த கலந்துரை யாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

இதனிடையே, அனல் மின் நிலை யங்களில் மின்சார உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நிலக்கரியின் தரத்தை சோதிக்கும் ஆய்வுகூட மொன்று நிறுவுவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தால் இந்த திட்டம் முன்னெ டுக்கப்படவுள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேசேன, எரிசக்தி அமைச்சர் பொறியியலா ளர் குமார ஜயக்கொடி ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாட லில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதனிடையே நுரைச்சோலை லக் விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் 3 மின்பிறப்பாக்கிகளும் திருத்தப் பட்டுள்ளன.

இவற்றில் 2 மின்பிறப்பாக்கிகள் தேசிய கட்டமைப்பில் இணைக்கப் பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் இணைக்கப்படும் மின் சாரத்தின் கொள்ளளவு 600 மெகாவாட் ஆகும்.

எஞ்சியுள்ளமின்பிறப்பாக்கிதேவைக் கேற்ப தேசிய கட்டமைப்பில் இணைக்கப் படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.



# போதைப்பொருளுடன் கனேடிய பெண் கைது

36 கிலோ 152 கிராம் ஹஷீஸ் போதைப்பொருளுடன் கனேடிய பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட் டுள்ளார்.

கனடாவின் டொரன்டோ நகரிலி ருந்து ஐக்கிய அரபு இராச்சியத் திற்கு சென்ற மேற்படி பெண் அங்கி ருந்து அபுதாபி விமானம் ஊடாக இலங்கையை வந்தடைந்துள்ளார்.

சர்வதேச புலனாய்வு தகவலுக்கு அமைவாக விமான நிலையத்தில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி கனேடிய பெண் தனது பயணப்பையில் வைத்திருந்த ஆடை களுக்குள் மறைத்துவைத்து போதைப்பொருளை கொண்டுவந் துள்ளார்.

36 வயதான கனேடிய பெண்ணொ ருவரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## படைகள் மீது கெடுபிடி!

மேஜர் பதவிக்குக் கீழே உள்ள அனைத்து இலங்கை இராணுவ வீரர்களும் தங்கள் கடவுச்சீட்டுகளை தத்தமது ரெஜிமேண்ட் - படைப்பிரிவு - தலைமையகத்திடம் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, சாதாரண சிப்பாய்களும், பிறைவேட், லாண்ட்ஸ் கோப்ரல், கோப்ரல், சார்ஜண்ட், ஸ்டாவ் சார்ஜண்ட், வாரண்ட் ஒபிஸர் ஆகிய தரங்களில் பணிபுரிவோரும் மற்றும் அதிகாரிகள் தரத்தில் உள்ள இரண்டாம் லெப்ரினன்ட், லெப்ரினன்ட், கப்டன் பதவி நிலையினரும் தங்கள் கடவுச்சீட்டுகளைத் தங்களுடனேயோ, தங்கள் வீடுகளிலேயோ வைத்திருக்க முடியாது.

அவர்களின் பயண ஆவணம் இனிமேல் அவர்களின் படைத் தலைமையகத்தில் மாட்டிக் கிடக்கும்.

இந்த முடிவு நிர்வாக நோக்கங்களுக்காக எடுக்கப்பட்டதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் வருண கமகே சாக்குப் போக்குக் காரணம் கூறியுள்ளார்.

வெளிநாட்டு பயிற்சி மற்றும் அலுவலக விடயங்களுக்காக இராணுவத்தினரின் கடவுச்சீட்டுகளைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதே இந்த நடவடிக்கை என்றும் மக்கள் காதில் பூச்சுற்றும் வகையிலான கருத்தை அவர் வெளிப்படுத்துகின்றார்.

பல இராணுவ வீரர்கள் வீட்டிலிருந்து வெளியே இருக்கின்றமையால், அலுவலக நோக்கங்களுக்காக கடவுச்சீட்டுகளைப் பெறுவதில் தாமதங்கள் ஏற்படலாம் என்று தங்களின் இந்த அபகரிப்பு - அத்துமீறல் - நடவடிக்கைக்கு அவர் நியாயம் வேறு கற்பிக்கின்றார்.

ஆயினும், தனிப்பட்ட பயன்பாட்டிற்காக எந்த நேரத்திலும் கடவுச்சீட்டுகளை படைப்பிரிவுகளிலிருந்து உரியவர்கள் மீட்டெடுக்கலாம் என்று செய்தித் தொடர்பாளர் மேலும் சமாதானம் கூறினார்.

நிர்வாக காரணங்களுக்காக மட்டுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேலும் சமாதானம் கூறுகின்றார்.

படையினர் சொல்லாமல் கொள்ளாமல் படைகளில் இருந்து விட்டோடுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவே அவர்களின் கடவு சீட்டுகளைப் பணயமாகப் பிடித்து வைத்திருக்க இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்று கேட்கப்பட்ட போது அதை மறுத்துள்ள இராணுவ பேச்சாளர், இது வெறுமனே நிர்வாக நடவடிக்கை என்று சளாப்புகின்றார்.

ஒருவரின் தேசிய அடையாள அட்டையும் கடவுச்சீட்டும் அவருக்குத் தனித்துவமான உரிமை கொண்ட ஆவணங்கள். அவற்றை யாரும் பிடுங்கவோ தடுத்து வைக்கவோ அதிகாரம் இல்லை. அதுவும் கடவுச் சீட்டை நீதிமன்ற அனுமதி இல்லாமல் தடுத்து வைப்பது, பறிமுதல் செய்வது, அபகரிப்பது போன்றவை கடும் குற்றங்களாகப் பார்க்கப்படுபவை.

அப்படி இருக்கையில்படைகளின் கீழ்மட்டத்தவர்கள்தத்தமது கடவுச்சீட்டை படைத் தலைமையகங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற என்று கட்டாயப்படுத்துவது அந்த படைச் சிப்பாயின் தனித்துவ உரிமைகளை - அடிப்படை உரிமைகளை - மீறுகின்ற நடவடிக்கையாகும்.

சாதாரண சிப்பாய்களின் பயண ஆவணங்களைக் கட்டாயப்படுத்தி பறிமுதல் செய்து படைத் தலைமையகங்களில் முடக்கி வைத்திருக்கின்றமை மோசமான அடிப்படை மனித உரிமை மீறலன்றி வேறில்லை.



# அகில இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் நேற்று கொழும்பு ஒன்றுகூடலில் அங்குரார்ப்பணம்

## மறைந்த பத்திரிகையாளர் இராஜநாயகம் பாரதிக்கும் அஞ்சலி









(க.மகாதேவன்)

இலங்கையில் அச்சு, இலத்திரனியல், இணையத்தளம் மற்றும் பதிவு செய்யப்பட்ட சமூக ஊடகங்களில் பணிபுரியும் தமிழ் மொழிபேசும் ஊடகவியலாளர்கள் மற்றும் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு தனித்துவத்துடன் செயற்படக்கூடிய அமைப்பை உருவாக்குவதற்கான முதல் முயற்சியாக விசேட கூட்டமொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. அங்கு அகில இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன்போது, தமிழ் ஊடகவியலாளர்களுக்கான புதிய ஒன்றியத்தின் நிர்வாக தெரிவுகள் இடம்பெற்றன. இதற்கமைய ஒன்றியத்தின் தலைவராக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் தெரிவு செய்யப்பட்டார்.

ஒன்றியத்தின் செயலாளராக 'தமிழன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜாவும் பொருளாளராக திருமதி வருணி ("ஜ"னியர் தமிழன் பத்திரிகை") தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் ஒன்றியத்தின் பிரதித் தலைவர்களாக தில்லையம்பலம் தரணீதரன்(சுயாதீன ஊடகவியலாளர்), கலாவர்சினி கனகரட்ணம் (சுயாதீன ஊடகவியலாளர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். உதவிச் செயலாளர்களாக மஹேஸ்வரி விஜயனந்தன்(சுயாதீன ஊடகவியலாளர்), நிர்ஷன் இராமானுஜம் (சுயாதீன ஊடகவியலாளர்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உதவிப் பொருளாளராக பார்த்தீபன் (சுயாதீன ஊடகவியலாளர்) தேர்வானார்.

ஒவ்வொரு பிரதேசங்களுக்குமான பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களும் இதன்போது தெரிவு செய்யப்பட்டனர்.

தொடர்ந்தும் கூட்டத்தில் பல மாவட்டங்களிலிருந்தும் கலந்துகொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட சிரேஷ்ட மற்றும் இளம் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்களில் எதிர்நோக்கும் சட்டப் பிரச்சினைகள், தொழில் நிரந்தரம், சம்பளம் மற்றும் பதவி உயர்வு போன்ற பல்வேறு பிரச்சனைகளை முன் வைத்தனர்.

அத்துடன் செயலாளர் சிவராஜா அங்கு கருத்து தெரிவிக்கையில் "இவ்வமைப்பில் இணைந்துள்ள சகல ஊடகவியலாளர்களுக்கும் காப்புறுதித் திட்டம் ஒன்று ஏற்பாடு செய்து தரப்படும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த தலைவர் செந்தில் வேலவர் –

"பிராந்திய ஊடகவியலாளர்கள் என்பவர்கள் ஒரு பத்திரிகையின் அல்லது இலத்திரனியல் ஊடகத்தின் முதுகெழும்பாக உள்ளனர். அவர்கள் பொருளாதாரப் பிரச்சினைகளில் சிக்கும் போதும், நோய்வாய்ப்படும் போதும், ஊடகவியலாளர்களுக்கு உதவுவதற்கு ஒர் பலமான அமைப்பில்லாமையினால் பலர் கடிதங்களை தனிப்பட்ட ரீதியில் எழுதுகின்றனர். அவர்களுக்கு நாம் உதவ வேண்டும். வெளிநாட்டு தூதரகங்களை நாடி, நாம் உதவித் திட்டங்களை பெற்றுக் கொடுத்தல், ஊடக அமைச்சரை சந்தித்தல், கிரிக்கெட் குழு, மகளிர் குழு என பல பிரிவுகளை ஏற்படுத்தி நிதிகளைத்திரட்டி பாதிக்கப்படும் ஊடகவியலாளர்களுக்கு இவ் அமைப்பின் ஊடாக உதவிகளைப் பெற்றுக்கொடுத்து உதவுவதற்காக நாம் பாடுபட வேண்டும்". என்றார்.

மகளிர் ஊடகவியலாளர்கள் பிரச்சினைகளைக் கண்காணிக்க மகளிர் இணைப்பாளராக மூத்த ஊடகவியலாளர் ஜீவா சதாசிவமும் இதன்போது நியமிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

மேலும், அண்மையில் மறைந்த சிரேஷ்ட ஊடகர் இராஜநாயகம் பாரதிக்கும் மரணித்த ஏனைய ஊடகவியலாளர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து, ஒன்றியத்தின் செயற்பாடுகளை கண்காணித்து ஆலோசனைகளை வழங்க உயர்பீடம் ஒன்றும் இக் கூட்டத்தில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



# வவுனியாவில் ஆக்கிரமிக்கப்படுகின்ற விவசாய நிலங்கள் குறித்து விசனம்!

## கமநல அபிவிருத்தி திணைக்களம் விடுத்துள்ள கோரிக்கை

(கி.வசந்தன்)

வவுனியாவில் ஏ9 வீதியை மையமாக கொண்டு பல விவசாய நிலங்கள் மண் போட்டு நிரப்பட்டு ஆக்கிரமிக்கபடுகின்றன என விவசாயிகள் விசனத்துடன் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறிப்பாக வவுனியா, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், யாழ் வீதி, பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயக் காணிகளில் மண் போட்டு அவற்றை நிரவி புதிதாக வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் என்பவற்றை அமைக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இது தொடாபில் ஊடகங்களில் பல தடவை தகவல்கள் வெளிவந்துள்ள போதிலும், விவசாயிகளும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திடம் முறையிட்டும் நடவடிக்கை எடுக்கபடவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.விமலரூபன் அவர்களிடம் கேட்ட போது –

எமக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ் வீதியில் விவசாய காணியில் கிரவல் போட்டு நிரப்பும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. இதனை நிறுத்தி உடனடியாக கிரவலை அகற்றுமாறு அறிவுறுத்தியுள்ளோம். தாண்டிக்குளம், பட்டாணிச்சூர் ஆகிய பகுதிகளிலும் இந்தச் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு எமது திணைக்களத்தால் நோட்டீஸ் முதல் கட்டமாக ஒட்டப்பட்டுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடரும். ஏனைய இடங்களிலும் இவ்வாறு நடந்தால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். – எனத் தெரிவித்தார்.

# இளைஞனின் சடலம் வவுனியாவில் மீட்பு



(கி.வசந்தன்)

வவுனியா, மகாறம்பைக்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் யாரும் இல்லாத நிலையில் தவறான முடிவெடுத்தே அவர் மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

26 வயதுடைய தனுசன் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். இது தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மற்றொரு வீட்டுக்கும் நேற்று முறிப்புப் பகுதியில் தீ வைப்பு!





(பா. சதீசன்)

முறிப்பு பகுதியில் இனம் தெரியாத நபர்களால் இரண்டாவது தடவையாக வீடு ஒன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு முள்ளியவளை முறிப்புப் பகுதியில் அமைந்துள்ள நபர் ஒருவரின் வீடே நேற்றையதினம் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது.

முறிப்பு பகுதியில் குழுக்களுக்கிடையில் 13 ஆம் திகதி இடம்பெற்ற கைக்கலப்பில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் 14ஆம் திகதின்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து நேற்று முன்தினம் இரவு ஒரு வீடு எரிக்கப்பட்ட நிலையில் மீண்டும் இரண்டாவது தடவையாக இன்றையதினம் உயிரிழந்தவரின் எதிராளிகளில் ஒருவரின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இதில் வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

கைக்கலப்புச் சம்பவத்தில் 36 வயது மதிக்கத்தக்க – முறிப்பு பகுதியில் வசித்த – மோகன் கோகுலன் எனும் குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் நல்லூரில் வார இறுதியில் நடைபெற்ற கம்பன் விழாக் காட்சிகள்












# யாழ்ப்பாணம் நல்லூரில் வார இறுதியில் நடைபெற்ற கம்பன் விழாக் காட்சிகள்



















# அமெரிக்காவிலிருந்து வந்த இந்தியர்களுக்கு கைவிலங்கு

அமெரிக்காவில் இருந்து 2 ஆவது இராணுவ விமானத்தில் பஞ்சாப் அழைத்து வரப்பட்ட சட்டவிரோத குடியேறிகளும் கைகளில் விலங்கிடப்பட்டு, கால்கள் சங்கிலியால் கட்டப்பட்டு விமானத்தில் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற ட்ரம்ப், சட்டவிரோத குடியேறிகளை கைது செய்து இராணுவ விமானத்தில் அவர்களது நாடுகளுக்கு திருப்பி அனுப்ப உத்தரவிட்டார். அதன்படி 104 இந்தியர்கள் கடந்த 5 ஆம் திகதி இந்தியா வந்தனர். அவர்களது கைகள் விலங்கிடப்பட்டு, கால்கள் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த காணொலி வெளியாகியது.

சட்டவிரோத குடியேறிகள் மனிதாபிமானமற்ற முறையில் அழைத்து வரப்பட்டதற்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. டில்லியில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உருவபொம்மையும் எரிக்கப்பட்டது. இதனால், இந்தியர்களை மனிதாபிமான முறையில் திருப்பி அனுப்ப, அமெரிக்காவிடம் இந்தியா வலியுறுத்தியிருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் 2 ஆவது விமானத்தில் வந்த தல்ஜித் சிங் என்பவர் கூறுகையில்,

"பயணத்தின் போது எங்களது கைகளில் விலங்கு, கால்கள் சங்கிலியால் இணைக்கப்பட்டிருந்தது" என்றார். இவர் பஞ்சாப் மாநிலம் ஹோசியார்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் அளித்த பேட்டியில், " நங்கள் அமெரிக்காவுக்குள் சட்டவிரோத குடியேறிகள் செல்லும் 'கழுதை பாதை' வழியாக சென்றோம்" என்றார்.

அவரது மனைவி கமல்ப்ரீத் கவுர் கூறுகையில், "எனது கணவரை அமெரிக்காவுக்கு சட்டப்பூர்வமாக அழைத்து செல்வதாக டிராவல்ஸ் ஏஜென்ட் உறுதி அளித்தார். ஆனால், அவர் பல நாடுகள் வழியாக அமெரிக்காவுக்கு சட்டவிரோதமாக அழைத்துச் செல்லப்பட்டார்" என்றார்.

பஞ்சாப்பில் நேற்று முன்தினம் தரையிறங்கிய இந்தியர்கள் அனைவரும் பரிசோதனைக்குப்பின் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

# மும்மொழிக் கொள்கையைத் திணிப்பது மாநிலங்களின் உரிமையைப் பறிப்பதாகும்

## விஜய் கண்டனம்



மும்மொழிக் கொள்கையை வலியத் திணிப்பது, மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பறிப்பதன்றி வேறென்ன? என்று த.வெ.க. தலைவர் விஜய் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

மும்மொழிக் கொள்கை குறித்த மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானின் கருத்துக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது எதிர்வினையை ஆற்றி வருகின்றனர். இந்த வரிசையில் த.வெ.க. தலைவர் விஜய்யும் இணைந்துள்ளார்.

இது தொடர்பாக விஜய் தனது சமூக வலைதளப் பக்கத்தில்,

"மும்மொழிக் கொள்கையை வலியத் திணிப்பது, மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைப் பறிப்பதன்றி வேறென்ன?

ஜனநாயகத்தின் நான்காவது தூணான இதழியல் துறைக்கு உரியதான பத்திரிகை சுதந்திர தர்மம் காக்கப்பட வேண்டும். நூற்றாண்டு காணும் விகடனின் இணையத்தளப் பக்கம் முடக்கப்பட்டதற்கு ஒன்றிய அரசுதான் காரணம் என்கிற கருத்து நிலவுகிறது. பத்திரிகை, ஊடகங்களால் வெளியிடப்படும் கருத்துகள் தவறானவையாகவோ, குற்றம் சுமத்துபவையாகவோ இருந்தால் நீதிமன்றம் மூலம் தீர்வு காண வேண்டுமே தவிர, கருத்துச் சுதந்திரத்தை முடக்கும் வகையில் செயல்படுவது, அரசியல் சாசன உரிமையைக் கேள்விக்குறி ஆக்குவதன்றி வேறென்ன?

மாநில மொழிக் கொள்கைக்குச் சவால் விடுத்து, தமிழகத்திற்கு நிதி ஒதுக்கமாட்டோம் என்று பகிரங்கமாக அறிவிப்பதும், விகடன் இணையத்தளப் பக்கத்தை முடக்கியதும் ஜனநாயகத்திற்கு எதிரான, கண்டனத்திற்கு உரிய ஃபாசிச அணுகுமுறையே.

ஃபாசிச அணுகுமுறைகளை எந்த வடிவத்தில் யார் கையிலெடுத்தாலும் அது ஒன்றிய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும் மக்கள் பக்கம் நின்று தமிழக வெற்றிக் கழகம் எந்நாளும் தீர்க்கமாக எதிர்க்கும்." என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான்,

"தேசிய கல்விக் கொள்கையை ஏற்க தமிழக அரசு மறுக்கிறது. அதனால் விதிமுறைகளின்படி எங்களால் நிதி ஒதுக்க முடியாது. தேசியக் கல்விக் கொள்கையில் மும்மொழி திட்டம் உள்ளது. அதையேற்று தமிழ், ஆங்கிலத்துடன், கன்னடம் உட்பட ஏதேனும் ஒரு இந்திய மொழியை கற்பதில் என்ன தவறு உள்ளது.

தேசிய கல்விக் கொள்கை உள்ளூர் மொழிக்கே முக்கியத்துவம் தருகிறது. தேசியக் கல்விக் கொள்கையை ஏற்கும் வரை விதிகளின்படி தமிழகத்துக்கு நிதி ஒதுக்க முடியாது." எனக் கூறியிருந்தார்.

# அவசர உச்சி மாநாடொன்றை நடத்த ஐரோப்பியத் தலைவர்கள் தீர்மானம்



உக்ரைன் யுத்தம் குறித்து ஐரோப்பியத் தலைவர்கள் அடுத்த வாரம் அவசர உச்சி மாநாடொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

பாரிஸில் நடைபெறவுள்ள இந்த மாநாடு தேசிய பாதுகாப்பு குறித்து நாடுகள் மிகவும் அரிதாக மேற்கொள்ளப்படும் சந்திப்பென தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஐரோப்பிய நாடுகள் நேட்டோவில் அதிக பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரித்தானியப் பிரதமர் கியர் ஸ்ராமர் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைனுக்கான அமெரிக்க ஜனாதிபதியின் விசேட தூதுவர், யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவது தொடர்பாக அமெரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் இடையேயான எந்தவொரு பேச்சுவார்த்தைகளிலும் ஐரோப்பியத் தலைவர்கள் பங்குகொள்ளமாட்டார்கள் என தெரிவித்த நிலையில் பாரிஸ் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

அதேவேளை, அமெரிக்க வெளிவிவகாரத்துறை செயலாளர் மார்கோ ரூபியோ உட்பட சிரேஷ்ட வெள்ளை மாளிகை அதிகாரிகள் எதிர்வரும் நாட்களில் சவுதி அரேபியாவில் ரஷ்ய மற்றும் உக்ரைன் பேச்சுவார்த்தையாளர்களை சந்திக்கவுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இந்தநிலையில், மாத இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை வெள்ளை மாளிகையில் பிரித்தானியப் பிரதமர் சந்திக்கும் போது ஐரோப்பியத் தலைவர்களின் கருத்துக்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியுடன் ஐரோப்பிய தலைவர்கள் பிறிதொரு சந்திப்பை மேற்கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



# காசாவின் தென் பகுதியில் தாக்குதல்; 2 இராணுவ உத்தியோகத்தர்கள் பலி

காசாவின் தென் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு இராணுவ உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்கு காசாவின் ரஃபா பகுதியிலிருந்து உதவிப் பொருட்களை கொண்டுச் சென்ற போதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், அந்த தாக்குதலில் 10 பேர் காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.




# இந்தியாவுக்கு வழங்கி வரும் நிதியை நிறுத்தியது அமெரிக்கா



எலான் மஸ்க் தலைமையிலான அமெரிக்க அரசாங்கத்தின் செயல்திறன் துறை இந்தியாவில் வாக்காளர்களின் சதவீதத்தை அதிகரிக்க வழங்கிய 21 மில்லியன் டொலர் நிதியை இரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் டொனால்ட் ட்ரம்ப், அரசாங்கத்தின் செயல்திறன் துறைக்கான தலைவராக கோடீஸ்வர தொழிலதிபர் எலான் மஸ்கை கடந்த மாதம் தெரிவு செய்தார்.

நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் வீணான செலவினங்களைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றில் ட்ரம்ப் மும்முரமாக செயற்பட்டு வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக தற்போது குறிப்பிட்ட நிதியை இரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமெரிக்க அரசாங்கத்தின் செயல்திறன் துறையின் உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றும் இடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 17.02.2025




இன்று அற்புதமான பலன்கள் கிடைக்கும்.உங்கள் இலக்குகளை முடிப்ப தற்கு போதிய அவகாசம் கிடைக்கும். உங்கள் முகம் பிரகாசமாக இருக்கும். நீங்கள் பல ஆச்சரியங்களைக் காணலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமை பாராட்டப்படும். புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையின் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

நிதிநிலைமையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டம் காணப்படும். பண விஷயத்தில் உங்கள் தரத்தை இன்று மேம்படுத்த முடியும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றலும் உற்சாகமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சிறிது பதற்றத்துடன் காணப் படுவீர்கள். நீங்கள் எதையும் சகஜமாக எடுத்துக் கொண்டு சிறிது அனுசரித்து நடந்தால் அனைத்தும்சிறப்பாக இருக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் சூடான விவாதம் காணப்படும். பணிகளின் சுமை அதிகரித்துக் கொண்டே யிருக்கும்.

உங்கள் இருவருக்கும் இடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். எனவே உங்கள் துணையுடன் ஒரு விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று உங்களின் அஜாக்கிரதை மற்றும் கவனக் குறைவு காரணமாக பண இழப்புகளை சந்திப்பீர்கள்.

செரிமானக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




மிதுனம்

உங்கள் பதற்றத்தை எப்படி குறை-ப்பதென்பதை கற்றுக்கொள்ளுங்கள். எந்தவிதமான எதிர்மறை எண்ண-த்துக்கும் இடம் கொடுக்காதீர்கள். நீங்கள்அற்புதங்களைப் புரிவீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்வீர் கள். தடைகளை சமாளித்து உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் வித்தியாசமான அணுகுமுறையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இது உங்கள் இருவருக்கும் இடையேயான உறவை பாதிக்கும். நன்கு புரிந்து கொள்வதன் மூலம் நன்மை கிடைக்கும்.

இன்று அதிகரித்து காணப்படும் பொறுப்புகள் காரண மாக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவீர்கள்.இன்று அதிக பணம் சேமிக்க இயலாது.




பதற்றம் காரணமாகச் சில சௌகரிங் களை இழப்பீர்கள். உங்களை சகஜமாக வைத்திருக்க இசையைக் கேளுங்கள் அல்லது திரைப்படம் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளைப் பாருங்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை முடிக்க உங்களுக்கு அளிக்கப்பட்ட நேரம் போதாது என்று நீங்கள் நினைப்பீர்கள். திட்டமிடுவதன் மூலம் சிறிது எளிதாக பணிகளை முடிக்கலாம்.

உங்கள் மனதில் தேவையற்ற எண்ணங்கள் காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். இதனால் மகிழ்ச்சி குறையும்.

இன்று உங்களிடம் குறைந்த அளவு பணமே காணப்படும். உங்கள் குடும்பத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




விஷயங்கள் அனைத்தும் சுமுகமாக நடக்கும் உங்கள் தன்னம்பிக்கை அதி கரித்து இருப்பதன் காரணமாக உங்கள் வளர்ச்சி சாத்தியப்படும். இன்றைய நாளை நீங்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிப் பீர்கள்.

இன்று மகிழ்ச்சியான நாளாக இருக்கும். இன்று ஊக்கத் தொகையும் சலுகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியைப் பொறுத்தவரை இன்று மகிழ்ச்சியான நாளாக இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். அவரிடம் நேர்மையாக இருப்பீர்கள். குடும்ப முன்னேற்றம் குறித்த பயனுள்ள விவாதம் நடக்கும்.

இன்று உங்களுக்கு அதிர்ஷ்டமான நாள். இன்று உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.




உங்கள் விருப்பங்களை நிறை வேற்றும் வகையில் பணிகளை நீங்கள் மேற்கொள்ளலாம். முக்கியமான முடிவுகள் இன்று நல்ல பலன்களைத் தரும்.நீங்கள் நம்பிக்கையுடன் இருப் பீர்கள். உங்களிடம் நகைச்சுவை உணர்வு காணப்படும். உங்களுக்குப் பிரியமானவர்கள் உங்களின் இந்த குணங்களைப் பாராட்டுவார்கள்.

குறைந்த நேரத்தில் பணிகளை விரைந்து முடிப் பீர்கள். இது உங்கள் சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கென தனிப்பாணி அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் திறமைகளைக் கொண்டு பணியை எளிதில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் காதல் உணர்வை வெளிப் படுத்துவீர்கள். உங்களின் மகிழ்ச்சியான மன நிலையை அவர் தெளிவாகப் புரிந்துகொள்வார்.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியுடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டும். அதிர்ஷ்டம் உங்க ளுக்கு சாதகமாக இல்லை. உங்கள் முயற்சி தான் உங்களுக்கு புகழை பெற்றுத் தரும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் ஒப்புக் கொண்ட வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பதற்கு இன்றைய நாளை திட்டமிடுங்கள்.

உங்களிடம் நுண் உணர்வு மேலோங்கி காணப்படும். எனவே உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்கவும்.

உங்களிடம் குறைவான பணமே காணப்படும். பணப் புழக்கம் குறைந்து காணப்படும். பொறுப்புகள் அதிகமாக இருக்கும். உங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு இன்றைய நாளை புத்திசாலித்தனத்துடன் கையாள வேண்டும்.




இன்று பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ள-தால் அமைதியாக இருக்க வேண்டும். சிறந்த இசை கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும். உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் அல்லது உங்கள் கீழ் பணிபுரிப வர்களுடன் நல்லுறவு காணப்படாது.

இன்று மனக் குழப்பம் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். மகிழ்ச்சியாக இருக்க இந்தப் போக்கை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இன்று உகந்த நாள் அல்ல. நிதி வளர்ச்சியில் இன்று சில கட்டுப்பாடுகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.02.2025


தனுசு

இன்று சற்று மந்தமான நாளாக காணப்படும். உங்கள் செயல்களை புத்திசாலித்தனமாக செய்ய வேண்டும். இன்று உங்கள் செயல்களில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

இன்று பணிகளைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள். கட்டுப்பாடற்ற சூழல் காரணமாக பணியில் மிகப் பெரிய தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் எழலாம். அதனை தவிர்க்க அவேண்டும். மகிழ்ச்சியைக் காண அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகளை சமாளிக்க நேரும். இதனால் கவலை ஏற்படும். பண இழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


கும்பம்

புதிய தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வதற்கு இன்று உகந்த நாள். உங்கள் முயற்சிகள் அனைத்தும் இன்று பலிக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்கள் பணிகள் அனைத்தையும் எளிதில் ஆற்றுவீர்கள்.

பணியிடத்தில் சிறப்பாக பணியாற்றி நற்பெயரை எடுப்பீர்கள். உங்கள் புதுமையான கருத்துக்கள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். துணையுடனான உறவை ஒரு புதிய நிலைக்கு மாற்றுவீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். இன்று பணம் சேமிப்பதற்கான அதிர்ஷ்டம் உள்ளது.

இன்று ஆற்றலுடனும் தைரியத்துடனும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.


மகரம்

வெவ்வேறு விஷயங்களில் உங்களிடம் சமநிலையான கருத்து காணப்படும்.உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.முக்கியமான முடிவுகள்எடுப்பதற்கு இன்று உகந்த நாள்.

உங்கள் பணிகளை சுமுகமாக செய்து முடிப்பீர்கள்.கடினமான பணிகளைக் கூட இன்று எளிதாகவும் விரைவாகவும் செய்து முடிப்பீர்கள்.

இன்று உங்களிடம் இனிமையான உணர்வு காணப்படும். நேர்மறையான எண்ணம் காணப்படும். எனவே உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக காணப்படும். உங்களிடம் கணிசமான தொகை காணப்படும்.


மீனம்

சூழ்நிலை உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் தினசரி செயல்களை செய்வதை கடினமாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளவும். அமைதியாக இருக்கவும்.

உங்கள் பணியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இன்று முன்னுரிமைப் படி பணிகளை அமைத்து செயல்படுவது அவசியம்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையை புரிந்துகொள்வது உங்களுக்கு கடினமாக இருக்கும். குழப்பத்தை விட்டுத் தெளிவான மனதுடன் பேசுவதன் மூலம் இருவருக்கும் இடையே நல்லுறவு ஏற்படும்.

இன்று அதிக பணம் சம்பாதிக்க இயலாது.



# சட்டவிரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கெசல்கமு ஓயா பகுதியில் கைது

காசல்ரி நீர்த்தேக்கத்திற்கு நீரை வழங்கும் கெசல்கமு ஓயாவில் சட்டவிரோதமாக மாணிக்கக் கற்கள் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் 15ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்ற சுத்திவளைப்பின் போதே சட்டவிரோதமான முறையில் கெசல்கமு ஓயாவில் மாணிக்க கற்கள் அகழ்வில் ஈடுபட்டு வந்தவர்களை பொகவந்தலாவ பொலிஸார் கைது செய்து உள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் இருந்து மாணிக்கக் கற்கள் அகழ்விற்குப் பயன் படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 22 வயது, 27 வயது, 47 வயது உடையவர்கள் எனவும் அவர்கள் பொகவந்தலாக மற்றும் பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவுன் பொலிஸார் தெரிவித்தனர்.

இது குறித்து பொகவந்தலாவ பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.